**இ.வே.ஆரா.கு – மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்**
ISO (9001:2015) சான்றிதழ் பெற்ற நிறுவனம்
**நாக்பூர்**

# பருத்தி விளைச்சலுக்கான முதல் வாராந்திர ஆலோசனை

(2 முதல் 8 வரை ஜூன் 2025)

| தமிழ்நாடு | | பெய்த மழையளவு –(மி.மீ) | | | | | | கணிக்கப்பட்டுள்ள மழையளவு –(மி.மீ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மே/ஜூன் | | | | | | ஜூன் | | | | |
| | | 29 | 30 | 31 | 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
|  | பெரம்பலூர் | | | | | | | 0.1 | 0.5 | 0.5 | 3.8 | 1.2 |
| | சேலம் | | | | | | | 0.2 | 0.8 | 3.4 | 0.9 | 0.2 |
| | திருச்சி | | | | | | | 0 | 0.4 | 1.2 | 1.5 | 0.1 |
| | விருதுநகர் | | | | | | | 0.3 | 0.6 | 1.2 | 0.3 | 0.2 |
| மழையின் அளவு மற்றும் வண்ணக் குறியீடு | | 0.1 to 2.4 மி.மீ | | 2.5 to 15.5 மி.மீ | | 15.6 to 64.4 மி.மீ | | 64.5 to 115.5 மி.மீ | | | 115.6 to 204.4 மி.மீ | |
| மழைப்பொழிவு வகை | | மிக லேசான மழை | | லேசான மழை | | மிதமான மழை | | பலத்த மழை | | | மிக அதிக மழைப்பொழிவு | |
| | **பயிர் நிலை**: நிலம் தயாரிப்பு நடைபெற்று வருகிறது.<br><br>**ஆலோசனைகள்**: | | | | | | | | | | | |

**பிந்தைய பருவம் மற்றும் விதைத்தலுக்கு முன்பான நடைமுறைகள் தொகுப்பு**

1. முந்தைய பயிர் பருவத்திலிருந்து மீதமுள்ள பருத்தி தண்டுகள் மற்றும் பகுதியளவில் திறந்துள்ள காய்களை அகற்றவும். பருத்தி தண்டுகள் மற்றும் அதன் வேர்களை வயலின் கரைகளில் அருகில் குவித்துவைக்க வேண்டாம். பயிர் பருவத்தின் இறுதியில், கடந்த தலைமுறை இளஞ்சிவப்பு காய்ப்புழு மற்றும் அதன் பிறநிலைகள் போன்றவை பருத்தி தண்டுகள், காய்கள் அல்லது மண்ணில் மறைவதற்கு இடம் பெறுகின்றன. எனவே, இவ்வாறான பாதிக்கப்பட்ட மீதிகளை உடனடியாக அழிக்க வேண்டும், இதனால் பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சி உடையும். மீதிகளை அழித்தல் புதிய பருவத்தின் பருத்தி பயிரில் பாக்டீரியல் இலை எரிச்சல், வேர் அழுகல் மற்றும் பூஞ்சை இலைக் கறைகள் போன்ற நோய்களின் தொற்றுகளை குறைக்க உதவும்.
2. மார்க்கெட் யார்டுகள் மற்றும் பருத்தி நார் உலர்த்தும் ஆலைகள் வளாகங்களில் பருவக்காலம் முடிந்த பின்பு தோன்றும் இளஞ்சிவப்பு காய்ப்புழு பூச்சிகளை பிடிக்கவோ அல்லது தற்கொலைகார தோற்றங்களை கண்டறியவோ, ஒவ்வொரு 20 மீட்டர் இடைவெளியிலும் குறைந்தபட்சம் 10 இனக்கவர்ச்சிப் பொறிகளை நிறுவுங்கள். இனக்கவர்ச்சிப் பொறிகளில் உள்ள ஈர்ப்பிகள் மாற்றத்தை சமயோசிதமாக செய்யவும். மேலும் சேதமடைந்த விதைகளிலிருந்து வெளிவரும் புழுக்களை அழிக்கவும். இது பருத்தி நார் உலர்த்தும் ஆலைகள் அல்லது மார்க்கெட் யார்டு வளாகங்களில் இருந்து அருகிலுள்ள நிலங்களுக்கு இளஞ்சிவப்பு காய்ப்புழு தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்த உதவும்.
3. பருத்தி பயிரின் முன் பருவ மழை விதைப்பை தவிர்க்கவும். பருவத்திற்க்கு முன் விதைக்கப்பட்ட பருத்திபயிர் துரிதமாக சப்பைகள் மற்றும் மலர்களை விரைவில் உருவாக்கும். முந்தைய பருவத்தின் உறங்கிய ஒட்டுமொத்தம் உருவான இளஞ்சிவப்பு காய்ப்புழு பூச்சிகள், இவ்வகையான துரிதமாக உருவாகும் சப்பைகள், மலர்கள் மற்றும் இலைகளிலும் முட்டை இடுகின்றன. இதனால் பருவத்திற்க்கு முன் விதைக்கப்பட்ட பருத்திபயிர், இளஞ்சிவப்பு காய்ப்புழு பூச்சிகளின் முதல் தலைமுறை பருவத்தை முடிக்க உதவுகிறது. சரியான நேரத்தில் கட்டுப்படுத்தவில்லை என்றால், இவ்வகையான சப்பைகள் மலர்கள், மற்றும் காய்கள் போன்றவை உருவானபோது, இந்தத் தலைமுறையின் அடுத்த தலைமுறைகளும் பரவுகின்றன.

4. ஆழமான கோடை உழுதல், ஏப்ரல்-மே மாதங்களில் கடும் வெப்பத்தின் காரணமாக மண்ணில் மறைந்து கிடக்கும் உறங்கிய காய்ப்புழு மற்றும் கூண்டுப்புழுக்களை (உறிஞ்சல) வெளிக்கொண்டு வந்து அழிக்க உதவுகிறது. மேலும், உழுத நிலங்களைப் பின்தொடரும் பறவைகள் இந்த பூச்சிகளின் வாழ்க்கை நிலைகளை பிடித்து உண்ணுகின்றன. இது இளஞ்சிவப்பு காய்ப்புழு, இலைகள் உண்கின்ற புழுக்கள் மற்றும் மண்ணில் உருவாகும் அழுகல், வேர் அழுகல் மற்றும் நூற்புழுக்கள் (நெமடோட்கள்) போன்ற பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்கத்தை குறைக்க உதவுகிறது.
5. கடந்த பருவத்தில் இளஞ்சிவப்பு காய்ப்புழு பெரிதும் பாதித்த நிலங்களில், இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களின் வாழ்க்கைச் சுழற்சியை உடைக்க பயிர் சுழற்சி மாற்றத்தைப் பின்பற்ற வேண்டும். இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களின் ஒரே வாழ்வாதாரம் பருத்தியே ஆகும், எனவே பயிர் மாற்றம் இந்த பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சியை உடைக்க உதவுகிறது. பயிர் சுழற்சி மாற்றம், மண்ணில் உருவாகும் நோய்கள் மற்றும் நூற்புழுக்கள் (நெமடோட்கள்) போன்ற நோய்களின் தொற்றுநோய்களை பரிசோதிக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
6. சாறு ஊறிஞ்சும் பூச்சிகள் மற்றும் நோய்களைத் தாங்கும், குறுகிய காலம் மற்றும் விரைவில் விளையும் பருத்தி வகைகள்/இணைமரபுகள்/செயற்கை வகைகள் வளர்க்கவும். இது ஆரம்ப பருவ பயிர் வளர்ச்சி நிலைப்பாட்டில் சாறு ஊறிஞ்சும் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்த தேவையற்ற பூச்சிமருந்து தெளிப்பதை தவிர்க்க உதவும். இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களின் தொற்று நடுப்பருவத்தில் துவங்கி, மிதமான வேகத்தின் அடிப்படையில் பருத்தியின் இறுதிப்பருவம் வரை அதிகரிக்கிறது. எனவே, குறுகிய காலம் மற்றும் விரைவில் விளையும் வகைகள் இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களின் தொற்றின் தாக்குதலில் இருந்து தவிர்க்க உதவுகிறது.
7. மத்திய இந்தியாவில் பருத்தி பயிரின் விதைப்பு, ஜூன் மாதத்தில் மட்டுமே, 80-100 மிமீ மழை நீர்வீழ்ச்சி கிடைத்த பிறகு செய்யப்பட வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் ஆகஸ்ட் மாதத்தில் பயிரிடவும். மேலும் சரியான முளைத்தலை உறுதி செய்யவும், ஆரம்ப நிலைப்பாட்டில் நீண்ட கால உலர்ந்த காலத்தை தாங்கிக்கொள்ளவும், போதுமான மண் ஈரப்பதம் இருக்க வேண்டும். இது நீண்ட கால மழை இல்லாத காலம் காரணமாக மறுவிதைப்பதைத் தவிர்க்கவும் உதவுகிறது. ஜூன் மாதத்தில் சரியான நேரத்தில் விதைப்பு இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களின் ஆரம்ப தொற்றுக்களைத் தவிர்க்க உதவுகிறது.
8. இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களின் மேலாண்மைக்காக ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) உத்தியை நடைமுறைப்படுத்துவதில் பருத்தி விவசாயிகள் மத்தியில் அதிக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கடை உரிமையாளர்கள் விவசாயிகளிடம் இதை பற்றி அறிவிக்கவும்.

பருத்தி உற்பத்தியில் விரிவான தொழில்நுட்பங்கள் குறிப்பாக மண் வகைகள் தேர்வு செய்தல், பருத்தி ரகங்கள், உர மேலாண்மை, விதைப்பு முறைகள், நீர் பாசன முறைகள், களை மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்துதல் போன்ற தகவல்களைப் பெற ஆண்ட்ராய்டு இயங்குதளத்திற்கான செயலி **சிஜசிஆர் காட்டன் ஆப்ஸ்** (CICR Cotton App) மத்திய பருத்தி ஆராய்ச்சி மையம் வடிவமைத்துள்ளது. இந்த ஆப்ஸ் ஆனது கூகுள் பிளே ஸ்டோர்ல் (Google Play Store) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் விவசாயிகளின் நலன் கருதி பயிரின் வெவ்வேறு வளர்ச்சி நிலைகள் மற்றும் வானிலை அடிப்படையிலான வாராந்திர ஆலோசனைகள் சி ஐ சி ஆர் வலைதளத்தில் (https://cicr.org.in/resource-weekly-advisory) பெறலாம்.

**தமிழ் மொழிபெயர்ப்பு: முனைவர்கள். அ. மணிகண்டன், & ம. சரவணன்**